பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் [illegible]

பக்கங்கள் எட்டு

விலைரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 10 செவ்வாய்க்கிழமை (26-9-2000) தொ பேசி;- 3378 ஒலி: 281

உள்ளே

க. பொ. த. சாதாரணதர மாணவருக்கான

கிறிஸ்தவம்

## ★ புலிகளுடனான யுத்தத்தில் "ஜானக பெரேரா" இருந்திருந்தால்

# யாழ்.குடா புலிகள்வசம் வந்திருக்கும்!

### தொலைக்காட்சிப் பேட்டியில் ஜெனரல் ரத்வத்த

(கொழும்பு விசேட நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இழந்த பிரதேசங்களை மீட்டெடுப்பதற்குப் போதியளவு இராணுவத்தினர் இல்லாத போதும் விடுதலைப்புலிகளுடனான யுத்தம் தீவிரமாக முன்னெடுத்துச் செல்லப்படும்.**

**யுத்தத்தால் மட்டும் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது ஆனால்பேச்சுவார்த்தைக்காக யுத்தம் நிறுத்தப்படமாட்டாது.ஒரு பிரபாகரனை அழிக்கும் போது பல பிரபாகரன்கள் தோன்றுவார்கள்.**

இவ்வாறு சுயாதீன தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அமைச்சர் ரத்வத்த மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக வெளிநாடுகளோ, அந்நாடுகளில் உள்ள அமைப்புகளோ எந்த வகையான அழுத்தத்தையும் கொடுக்க முடியாது. அதற்குரிய சந்தர்ப்பத்தையும் கொடுக்க மாட்டோம்.

வெளிநாடுகளில் உள்ள சுமார் ஏழு லட்சம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்குப் பல்வேறுவழிகளிலும் உதவி வழங்குகிறார்கள்.

இந்த உதவிகளை தடுத்து நிறுத்துவதற்குவெளிநாட்டு அமைச்சர் நடவடிக்கை எடுத்துவருகின்றார். இந்த நடவடிக்கைகள் மூலம் உதவி வழங்குபவர்கள் நிலைமையைப் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர் என்றார்.

இப்பேட்டியின் போது ஜானகபெரேரா தொடர்பாக புத்த பிக்குகள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த

(8ஆம் பக்கம் பார்க்க)

### எலக்ரோனிக் மூக்கு இலண்டனில் தயாரிப்பு

செயற்கைக் கால், செயற்கைக் கை என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா, தற்போது 'எலக்ரோனிக் மூக்கு' என்ற அவயவத்தையும்விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். இலண்டனிலுள்ள நியூரோனிக் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட இம் மூக்கில 12 நுகர் கருவிகள் உள்ளது. இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் இவ் எலக்ரோனிக் மூக்கைப் பயன் படுத்துவதன் மூலம் எத்தகைய இரசாயனக் கூறுகளையும் நுகர்ந்து அறிய முடியுமெனதயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந)

### யாழ். குடாவின் பல்வேறு பகுதிகளில் இராணுவம் - புலிகள் மோதலாம்!

(கொழும்பு)

செம்மணி கிழக்கு மற்றும் கொழும்புத்துறை பகுதிகளில் நேற்று இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறுபடையினர் காயமடைந்துள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை சாவகச்சேரி செம்மணி மற்றும் சிவியாதெரு ஆகிய இடங்களில் கனரக ஆயுதங்கள் சகிதம் படையினர் நடத்திய தாக்குதலில் புலிகள் தரப்பில் 24 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (வ-4)

### ◌ கொழும்புத்துறை, அரியாலை

# படை நடவடிக்கையில்; புலிகள் 10 ஆயிரம் ஷெல்களை ஏவினர்

### பாதுகாப்பு அமைச்சு விபரிப்பு

(கொழும்பு)

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் கடந்த 8ஆம், 10 ஆம் திகதிகளில்

அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவிடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவிக்கையில் 'ரிவிகிரண' 1ஆம்

கொடுக்க வேண்டியிருந்தது'

இராணுவத்தினரின் திட்டமிட்ட இந்நடவடிக்கைகளுக்கு 'மிக்' ரக யுத்தவிமா

### இயந்திரக் கோளாறு; ஜீப் தீப்பற்றியது

(கொழும்பு)

கொழும்பில் இராணுவத்தினரின் ஜீப் வண்டி ஒன்று திடீரென தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜீப் வண்டிதீப்பிடித்த இடத்திற்கு உடனடியாக விரைந்த பொலிசார் அங்கு மேற்கொண்ட விசாரணையில் இயந்திரக் கோளாறு காரணமாகவே தீப்பிடித்துக் கொண்

(கொழும்பு)

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் கடந்த 8 ஆம், 10 ஆம் திகதிகளில் இராணுவத்தினர் மேற்கொண்ட 'ரிவிகிரண' நடவடிக்கையின் போது சுமார் 10 ஆயிரம் எறிகணைகளை விடுதலைப் புலிகள் பிரயோகித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவிடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவிக்கையில் 'ரிவிகிரண' 1ஆம் 2ஆம்கட்டபடை நடவடிக்கைகளின் போது கொழும்புத்துறை அரியாலை பகுதிகளை படையினர் கைப்பற்றுவதற்கு புலிகளின் பலத்த தாககுதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

இராணுவத்தினரின் திட்டமிட்ட இந்நடவடிக்கைகளுக்கு 'மிக்' ரக யுத்தவிமானங்கள். ஆட்லறி மற்றும் பல்குழல் பீரங்கிகள் பெரும்

(8-ம் பக்கம் பார்க்க)

டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு ஹவ்லொக் வீதியிலேயே இந்த இராணுவ ஜீப் வண்டி தீப்பற்றிக்கொண்டதாகத் தெரிவிக்கப்படு

கொண்ட விசாரணையில் இயந்திரக் கோளாறு காரணமாகவே தீப்பிடித்துக்கொண்டதாகவும், தாம் போவதற்கு முன் தீ அணைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். (வ)

# பம்பலப்பிட்டியில் தேடுதல் 20தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

பம்பலப்பிட்டிப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலிசார் 20 தமிழ் இளைஞர்களை நேற்று கைது செய்து விசாரணைக்குட்படுத்தி பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்த இளைஞர்களை அமைச்சர் ஜீ.எல்,பீரிஸ் தலையிட்டு விடுவித்ததுடன்,

இந்த இருபது இளைஞர்களுக்கும் அமைச்சர் பீரிஸின் சின்னம் பொறிக்கப்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபனின் நினைவு அனுஷ்டிப்பு

(வவுனியா)

தியாகி திலீபனின் 13 வது ஆண்டு நினைவு தினம் இன்று வன்னிப்பகுதியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள பாடசாலைகள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டு மக்கள் அடையாள

(8-ம் பக்கம் பார்க்க)

# ★ ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு ஒக்ரோபரில் வழங்க நடவடிக்கை

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் வழங்கப்படாதிருக்கும் 1999 ஆம் ஆண்டுக்குரிய இடர்காலக் கொடுப்பனவுகளை ஒக்ரோபர் அல்லது நவம்பர் மாதச் சம்பளத்துடன் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் வடக்கு - கிழக்கு மாகாண

(8 ஆம் பக்கம் பார்க்க)

# "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பல் பயண சேவை இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து திருமலைக்கான 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் பயண ஆயத்தங்களுடன் இன்று காலை 7-00 மணிக்கு யாழ் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் கேட்டுள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ★ 'சூரியக்கதிர்' நடவடிக்கையின் போது மீட்கப்பட்ட பலஇலட்சம் பெறுமதியான நகைகள் படையினர் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1995 ஆம் ஆண்டு வலிகாமத்தில் இடம்பெற்ற 'சூரியக்கதிர்' இராணுவநடவடிக்கையின்போது இராணுவத்தினரால் நல்லூர்பகுதிகளில் மீட்கப்பட்ட பெருமளவுநகைகள் நேற்றுக்காலை பலாலி இராணுவ தலைமையகத்தில் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனிடம் ஒப்படைக்கப்பட்டன.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நகைகளின் இன்றைய

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபையை
## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி)
## கையேற்ற பின்பு நடைபெற்ற
# வேலைத்திட்டங்களின் விபரம்-2000



''ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம், மக்களால் தெரிவுசெய்யப்பட்டு உள்ளூராட்சி சபைகள் மூலம் மககளின் தேவைகளை அறிந்து சேவைகளைச் செய்து வருகின்றோம். எமது செயலாளர் நாயகமும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய 'கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலின் மூலமும் மக்களின் ஒத்துழைப்பின் மூலமும் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் கே. வி, குகேந்திரனின் (ஜெகன்) முயற்சியாலும் சேவை செய்துவரும் இவ் வேளையில், பல பிரதேச உறுப்பினர்களைத் துப்பாக்கிக் குண்டுகளுககு இரை கொடுத்தும் தொடர்ந்துவரும் அச்சுறுத்தலின் மத்தியிலும் எமது மக்களின் பணிகளில் இருந்து விலகி ஒயப் போவதுமில்லை, ஓடப்போவதுமில்லை என்பதை மக்களாகிய உங்களுககுத் தெரிவிப்பதுடன் எமது சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் எவை என்பதை தங்கள் முன் சமர்ப்பிககின்றோம்,

இங்ஙனம்

உ. அ. சலீம் ஜே. பி.
உப தலைவர்
வலி, கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி,

திரு. பூ. குணசிங்கம் ஜே. பி. யூ. எம்.
தவிசாளர்
வலி, கிழக்கு பிரதேசசபை,
நீர்வேலி,

### எமது கட்சியின் முயற்சியால் வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கீழே குறிப்பிடும் ஆண்டுகளுக்கு பல லட்சம் ரூபா அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுள்ளன.

### 1998 ரூபா 5038000|- 1999 ரூபா 6770000|:

#### பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டம்- 2000

| | வேலையின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1) | உரும்பிராய் சிவன்வீதி திருத்தம் | 50000 00 |
| 2) | உரும்பிராய் கணேசா ச; ச; நிலைய கட்டடத் திருத்தம் | 50000 00 |
| 3) | அச்சுவேலி சஜமுகன் பா; பா; விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | 50000 00 |
| 4) | தொண்டைமானாறு ஆவரங்கால்1-ம்ஒழுங்கை திருத்தம் | 25000 00 |
| 5) | நீர்வேலி கந்தசாமி கோவில் மேற்கு வீதி திருத்தம் | 30000 00 |
| 6) | அச்சுவேலி காளிகோவில் வீதி திருத்தம் | 50000 00 |
| 7) | கோப்பாய் வடக்கு கலம்பரை வீதி சீமெந்து அணைகட்டுதல் | 60000 00 |
| 8) | உரும்பிராய் இந்து இளைஞர் ச; ச; நிலைய மலசலகூடம் அமைத்தல் | 15000 00 |
| 9) | யோகபுரம் பகுதி குழாய்க் கிணறு திருத்தம் | 20000 00 |
| 10) | இருபாலை ஸ்ரீ விக்னேஸ்வரா ச; ச; நிலைய திருத்தம் | 25000 00 |
| 11) | புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதி மத்திய ச; ச; நிலைய முன் ஒழுங்கை திருத்தம் | 50000 00 |
| 12) | சிறுப்பிட்டி ஜனசக்தி ச; ச; நிலைய மலசலகூடம் அமைத்தல் | 25000 00 |
| 13) | உரும்பிராய் இந்துக்கல்லூரி ஒழுங்கை திருத்தம் | 50000 00 |
| 14) | புத்தூர் புன்னைக்குள வீதி மதகு அமைத்தல் | 60000 00 |
| 15) | செயமணி வாய்க்கால் திருத்தம் | 100000 00 |
| 16) | அச்சுவேலி இருபாலைக்கு நீர் வழங்கல் | 25000 00 |
| 17) | விநாயகர் வீதி திருத்தம் கல்வியங்காடு | 150000 00 |
| 18) | தம்பாலை ஸ்ரீ முருகன் ச; ச; நிலைய வீதி | 50000 00 |
| 19) | அச்சுவேலி தென்இந்திய திருச்சபை பாலர் பாடசாலை விளையாட்டு உபகரணம் | 200000 00 |
| 20) | அச்சுவேலி சலவைத் தொழிலாளர் கிணறு தொட்டி திருத்தம் | 80000 00 |
| 21) | அச்சுவேலி கலாநிதி ச; ச; நிலைய பாலர் பாடசாலை திருத்தம் | 15000 00 |

#### உள்ளூராட்சி மன்ற விசேட நிதியில் செய்யப்பட்ட வேலை-1999

| | வேலையின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1) | புனித திரேசா பா; பா; திருத்தம் அச்சுவேலி | 20000 00 |
| 2) | சிறுவர் பூங்கா அமைத்தல் இருபாலை கோப்பாய் | 200000 00 |
| 3) | ஞானவைரவர் சனசமூக நிலைய திருத்தம் அச்சுவேலி | 30000 00 |
| 4) | ஜனசக்தி ச; ச; நிலையத் திருத்தம் சிறுப்பிட்டி | 25000 00 |
| 5) | சரஸ்வதி ச. ச; நிலைய பா; பா; டசாலை தொடர் வேலை கோப்பாய் | 25000 00 |
| 6) | முழுமதி சனசமூக நிலைய திருத்தம் கோப்பாய் | 25000 00 |
| 7) | அண்ணா சனசமூக நிலைய திருத்தம் யோகபுரம் | 25000 00 |
| 8) | கதிரொலி சனசமூக நிலைய திருத்தம் அச்சுவேலி | 40000 00 |
| 9) | பொது விளையாட்டு மைதானம் அமைத்தல் அச்சுவேலி | 125000 00 |
| 10) | கலைக்கதிர் சனசமூக நிலைய திருத்தம் வளலாய் | 75000 00 |
| 11) | எல்லாளன் சனசமூக நிலைய திருத்தம் புத்தூர் | 80000 00 |
| 12) | முரசொலி சனசமூக நிலைய திருத்தம் கதிரிப்பாய் | 40000 00 |
| 13) | பாரதி கலாமன்றம் பா; பாடசாலை புனரமைப்பு | 50000 00 |
| 14) | கலையகம் சனசமூக நிலைய பாலர் பாடசாலை சட்டடத் திருத்தம் புத்தூர் | 50000 00 |
| 15) | வளர்மதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை அமைத்தல் புத்தூர் | 115000 00 |

#### சபை நிதி வேலை 1999

| | வேலையின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1) | அச்சுவேலி சந்தை மேல்மாடி மேலதிகவேலை | 335000 00 |
| 2) | சிவசக்தி சனசமூக நிலைய திருத்தம் பன்னாலை நீர்வேலி | 75000 00 |
| 3) | ஆவரங்கால் உபதபாற் கந்தோர் திருத்துதல் | 12500 00 |
| 4) | நீர்வேலி பன்னாலை வீதி மதகு கொங்கிறீற் போடுதல் | 29500 00 |
| 5) | நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை வீதி திருத்தம் | 136000 00 |
| 6) | ஆவரங்கால் நடராஜஇராமலிங்க மகா வித்தியாலய வீதி திருத்தம் | 200000 00 |
| 7) | உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் முதலாம் வீதி திருத்தம் | 117000 00 |
| 8) | புத்தூர் சோமஸ்கந்தா பாடசாலை வீதி திருத்தம் | 183000 00 |
| 9) | வாச்சா ஒவ்வை ஒழுங்கை திருத்தம் கோப்பாய் | 132500 00 |
| 10) | கோப்பாய் வடக்கு சந்தை திருத்தம் | 218000 00 |
| 11) | கோப்பாய் சந்தை மதில் கட்டுதல் | 100000 00 |
| 12) | அச்சுவேலி சந்தை திருத்தம் | 43000 00 |
| 13) | புத்தூர் கிழக்கு பெரியதம்பிரான் கோயிலடி பொதுக்கிணறு திருத்த வேலை | 92000 00 |
| 14) | அச்சுவேலி சந்தைக்கு மதில் கேற் அமைத்தல் | 106500 00 |
| 15) | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை ஆட்டு இறைச்சிக்கடை அமைத்தல் | 63660 00 |
| 16) | புத்தூர் பொதுச் சந்தை திருத்தம் | 142000 00 |
| 17) | அச்சுவேலி பொதுச் சந்தையில் மீன்சந்தைக்கு அருகில் நீர்த் தொட்டி அமைத்தல் | 14750 00 |
| 18) | உரும்பிராய் கொல்களம் அமைத்தல் | 84000 00 |
| 19) | அச்சுவேலி கொல்களம் அமைத்தல் | 90000 00 |
| 20) | உரும்பிராய் சந்தைக் காணியில் சிவகுமாரன் சிலை அமைத்தல் | 437500 00 |
| 21) | அச்சுவேலி சந்தை மேல்மாடித் தொடர் வேலை 2 ம் கட்டம் | 1200000 00 |
| 22) | உரும்பிராய் சந்தைக்கடைகள் 01; 02; 03 திருத்தியமைத்தல் | 145000 00 |
| 23) | உரும்பிராய் சந்தை 04,05 ஆம் கடைகளை இறைச்சிக் கடையாக மாற்றியமைத்தல் | 118970 00 |
| 24) | ஆவரங்கால் சந்தைக்கடைஇல 01 திருத்தம் | 113000 00 |
| 25) | நீர்வேலி உப அலுவலக நூல் நிலைய வாசிப்பு மண்டப கூரைத் திருத்தம் | 13800 00 |
| 26) | உரும்பிராய் உப அலுவலகத்திற்கு சுற்றுமதில்கேற் அமைத்தல் | 199000 00 |
| 27) | உரும்பிராய் சந்தைக்கு சுற்றுமதில் கேற் அமைத்தல் | 153000 00 |

(3-ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## வலிகாமம் கிழக்கு...

பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டம் 1999

| வேலை விபரம் | ஒதுக்கீட்டுத் தொகை |
|---|---|
| 01) சலைக் கதிர் வீதி வளலாய் | 70000 00 |
| 02) பொக்கடை வீதி ஊரெழு உரும்பிராய் | 50000 00 |
| 03) செல்வா வீதி வாதரவத்தை | 50000 00 |
| 04) வளர்மதி ச.ச. நிலைய வீதி புத்தூர் | 50000 00 |
| 05) பன்னாலை வீதி நீர்வேலி | 40000 00 |
| 06) மாணிக்கர் வீதி மதகு சிறுப்பிட்டி வடக்கு | 50000 00 |
| 07) இழுவணை ஒழுங்கை கோப்பாய் | 30000 00 |
| 08) தொகுதிப் பண்ணை வீதி உரும்பிராய் | 40000 00 |
| 09) விநாயகர் வீதி கோப்பாய் தெற்கு | 40000 00 |
| 10) வெள்ளெருவப் பிள்ளையார் கோவில் ச.ச. நிலையம் மலசலகூடம் அமைத்தல் | 25000 00 |
| 11) நாவலர் ச.ச. நிலையம் கோப்பாய் | 30000 00 |
| 12) இந்திரன் ச.ச. நிலைய வீரவாணி வாதரவத்தை புத்தூர் | 25000 00 |

2000 ம் ஆண்டு சபை நிதியில் செய்யவுள்ள வேலைகள்

01) உலவிச் குளம் பிள்ளையார் கோயில் வீதி திருத்தம் அச்சுவேலி
02) பத்தைமேனி பிள்ளையார் கோவில் வீதி திருத்தம் அச்சுவேலி
03) அச்சுவேலி பஸ் நிலைய திருத்தம்

வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அபிவிருத்தி அதிகார சபை (றான்) வேலைகள் 2000 (03 மில்லியன்)

| வேலை விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை |
|---|---|
| 01) நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணியம் ச.ச. நிலையம் திருத்தம் | 50000 00 |
| 02) புத்தூர் லிங்கன் ச.ச. நிலையத் திருத்தம் | 50000 00 |
| 03) யோகபுரம் அண்ணா ச.ச. நிலைய பாலர் பாடசாலை திருத்தம் | 80000 00 |
| 04) புத்தூர் கிழக்கு மகாத்மாகாந்தி ச.ச.நி. திருத்தம் | 75000 00 |
| 05) ஆவரங்கால் பொதுமயானம் திருத்தம் | 100000 00 |
| 06) நீர்வேலி மயானம் அமைத்தல் | 70000 00 |
| 07) உரும்பிராய் செல்வபுரம் உதயசூரியன் ச.ச நிலைய பா. பாடசாலை திருத்தம் | 80000 00 |
| 80) ஊரெழு கலைவாணி ச.ச. நிலைய அரங்கு திருத்தம் | 50000 00 |
| 09) உரும்பிராய் மேற்கு திருக்குமரன் ச.ச. நிலையம் திருத்தம் | 50000 00 |
| 10) நீர்வேலி பரமேஸ்வரி ச.ச. நிலையத் திருத்தம் | 55000 00 |
| 11) ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதி மயான வீதி திருத்தம் | 75000 00 |
| 12) புத்தூர் அறிவொளி ச.ச நிலைய திருத்தம் | 50000 00 |
| 13) உரும்பிராய் காந்திஜி ச.ச. நிலைய திருத்தம் | 40000 00 |
| 14) வலை ய் ச ச நிலைய பா.பா. கட்டட திருத்தம் | 75000 00 |
| 15) அச்சுவேலி அன்னை திரேசா ச.ச. நிலைய கட்டடம் அமைத்தல் | 75000 00 |
| 16) அச்சுவேலி ஞானவைரவர் ச.ச. நிலையம் திருத்தம் | 50000 00 |
| 17) புத்தூர் உப அலுவலக மலசலகூடம் திருத்தம் | 25000 00 |
| 18) புத்தூர் கலைமதி ச.ச.நி. கட்டட தொடர் வேலை | 50000 00 |
| 19) வளலாய் கலைக்கதிர் ச.ச.நி. கட்டட தொடர் வேலை | 100000 00 |
| 20) இருபாலை கிழக்கு உதயதாரகை ச.ச. நிலைய பா.பா. கட்டிடம் அமைத்தல் | 100000 00 |
| 21) கோப்பாய் வள்ளியம்மன் ச.ச.நி. கட்டட திருத்தம் | 75000 00 |
| 22) சிறுப்பாய் சுப்பிரமணிய ச.ச. நிலையம் திருத்தம் | 75000 00 |
| 23) ஊரெழு வளர்பிறை ச.ச.நி. கட்டடத் திருத்தம் | 75000 00 |
| 24) பத்தைமேனி அன்னை இந்திரா ச.ச. நிலைய பா.பா. தொடர் வேலை | 50000 00 |
| 25) ஆவரங்கால் கலையகம் ச.ச. நிலைய பாலர் பாடசாலை தொடர் வேலை | 75000 00 |
| 26) ஆவரங்கால் சர்வோதய ச.ச. நிலைய பாலர் பாடசாலை கட்டடம் திருத்தி அமைத்தல் | 100000 00 |
| 27) உரும்பிராய் வடக்கு சரஸ்வதி ச.ச நிலைய திருத்தம் | 50000 00 |
| 28) இருபாலை கிழக்கு ச.ச. நிலைய திருத்தம் | 100000 00 |
| 29) ஊரெழு மேற்கு சரஸ்வதி ச.ச. நிலைய திருத்தம் | 50000 00 |
| 30) உரும்பிராய் இருளன் மயானம் திருத்தம் | 60000 00 |
| 31) புத்தூர் சிறுப்பிட்டி மயானமடம் அமைத்தல் | 100000 00 |
| 32) புத்தூர் நிலாவரை மயானமடம் அமைத்தல் | 100000 00 |
| 33) புத்தூர் வளர்மதி ச.ச. நிலைய திருத்தம் | 75000 00 |
| 34) புத்தூர் மத்திய ச.ச. நிலைய திருத்தம் | 80000 00 |
| 35) உரும்பிராய் பொக்கணை குடியேற்ற வீதி திருத்தம் | 100000 00 |
| 36) அச்செழு குறுக்கு வீதி திருத்தம் | 75000 00 |
| 37) உரும்பிராய் இளைஞர் ச.ச.நி தண்ணீர் தாங்கி அமைத்தல் | 60000 00 |
| 38) பொக்கணை சுடலை மடம் அமைத்தல் | 100000 00 |
| 39) அச்சுவேலி பொது விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு அமைத்தல் [பலவியன்] | 300000 00 |
| 40) உழவு இயந்திரம் இழுவைப் பெட்டி நீர் இறைக்கும் இயந்திரம் நீர்த் தாங்கி முதலியன கொள்வனவு | 5000000 00 |

கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்-2000

| | |
|---|---|
| 01) உரும்பிராய் சிவன் வீதி திருத்தம் தொடர் வேலை | 150000 00 |
| 02) உரும்பிராய் இந்துக் கல்லூரி வீதி திருத்தம் | 250000 00 |
| 03) பொன்னுத்துரை வீதி திருத்தம் | 130000 00 |

(இ-821)

## இராசி பலன்

26/ 09 / 2000
(புரட்டாதி 10, செவ்வாய்)
சதுர்த்தசி
பி. இ. 3.26 வரை
பூரம் பி-இ 1.25 வரை
இராகுகாலம்
3.02- 432
சுபநேரம்
10.32- 12-02

**மேடம்**
சொத்துக்களால் கவலை, மனஸ்தாபம், காரியம் கைகூடும்.

**இடபம்**
நண்பர்கள் நம்பிக்கை குறை, வாகன சுகம், உஷ்ண ரோகம்.

**மிதுனம்**
தன லாபம், சகோதரர்களால் நன்மை, நினைத்தகாரியம் கை கூடும்.

**கடகம்**
விவாதம், காரிய தாமதம், சுபசெய்தி.

**சிங்கம்**
புதிய சிந்தனை, உடல் நலம், சுவாரஸ்யம்.

**கன்னி**
காரிய தாமதம், பிரயாணம், தன விரயம், மனச்சஞ்சலம்.

**துலாம்**
தனலாபம், குடும்பசுகம், நினைத்த காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**
அபகீர்த்தி, தொழில் மேன்மை, நன்மையான காரியம்.

**தனுசு**
தேவையற்ற பயந்த சுபாவம், காரிய தாமதம், அரச நன்மை.

**மகரம்**
மனதிற்கு பிடிக்காத செய்தி அலைச்சல், தடுமாற்றம்.

**கும்பம்**
சுவாரஸ்யம், விருந்துபசாரம், தனலாபம்.

**மீனம்**
சுப நிகழ்வு, முயற்சி விருத்தி செல்வாக்கு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாட்டில் நல்லநிலையை எதிர்பார்த்தல் கடினமே

(கொழும்பு)

யுத்தத்தால் பிளவுபட்ட ஒருநாட்டில் நல்ல எதிர் காலத்தை எதிர்பார்க்கமுடியாதென ஐக்கியதேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைப்பாடுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு-கிழக்கு யுத்தத்தை தீர்க்க புதிய அணுகுமுறை தேவை.

பாரிய ஆயுதங்களும், பெருமளவு இராணுவத்தினராலும்மட்டும் இனப்பிரச்சினையை முற்றாகதீர்க்கமுடியாது.

பேச்சுவார்த்தையே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வளிக்கமுடியுமென்று மேலும் அவர் தெரிவித்துள்ளார். [க]

## காருக்குள்ளிருந்து இளைஞன் சடலம் மீட்கப்பட்டது

(கொழும்பு)

காருக்குள் எரிந்தநிலையில் இளைஞர்ஒருவரின் சடலத்தைகல்கிசைப்பொலிஸார் மீட்டுள்ளனர்.

கல்கிசை தனியார் விடுதிக்கருகில்உள்ள ஒழுங்கையொன்றில்இருந்து மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம், கொழும்பு-5 என்ற முகவரியில் வசிக்கும் 18 வயதுடைய முஹமட் இக்பால் எனும்முஸ்லிம் வாலிபருடையது என இனம்காணப்பட்டுள்ளது.

மேற்படி இளைஞரின் உறவினர் தமது முறைப்பாட்டில் உறவினரின் காரொன்றில் திருமண வீடொன்றுக்குச் சென்றவேளை காணாமல் போய்விட்டதாக தெரிவித்துள்ளனர்.

இவருடையமரணம்தொடர்பான விசாரணை துரிதகதியில் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக பொலிஸார்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## பாடநூல் பெறுவதில் சிரமம்

(செம்பியன்பற்று)


யாழ். மாவட்டத்திலுள்ள பத்தாம்தர மாணவர்க்கு புதிய பாடத்திட்ட இலவசப்பாட நூல்கள் இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை என மாணவர்கள் மத்தியில் விசனம் பெரும்தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டிலும், மாணவர்களுடைய கற்றல் செயற்பாட்டிலும் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இம்மாணவர்கள் அடுத்த வருடம் க. பொ. த. சாதரண பரீட்சைக்கு தோற்றுபவர்கள். இவர்களிற்கு இனி வரும் பதினோராம் தர வகுப்பிலும் பாடநூல் முழுமையாக கிடைக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இலங்கையின் தென்பகுதியில் இப்பாடநூல்கள் முதலாம் தவணை ஆரம்பத்திலே வழங்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-42)


கல்வித்துறை சிறப்புற
தரமும் வளங்களும் மென்மேலும் அதிகரிக்க
கல்வித்துறைக்கு கடந்த காலத்தில் ஆற்றிய பணி
எதிர் காலத்தில் தொடர எம்மை ஆதரித்திடு வீர்!



என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
1689)
(புளொட் + ஈரோஸ்)

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## கிறிஸ்தவம்

ஆக்கம்; மறைக்கல்வி நிலையம்

### மாதிரி வினாத்தாள் 2 பகுதி - I

01) லூக்கா தன் நற்செய்தியை எழுதியதன் நோக்கம்.
(1) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்தே இறை மக்கள் எதிர்பார்த்த மீட்பர் இயேசு என்பதைக் காட்டுவதற்காகும்.
(2) உரோமையில் வாழ்ந்த யூத மக்களின் மீட்பர் இயேசு என்பதை நிரூபிப்பதற் காகும்.
(3) இயேசு முழு மனித குடும்பத்தினதும் மீட்பர் என்பதை புறவினத்தாருக்கு காட்டு வதற்காகும்
(4) படிலின்னபடிப்பினைகளின் படி வெளிப்பட்ட இயேசுவின் போத னைகளைபுத்தகவடிவாக்குவதற்காகும்.

02) கிறிஸ்துவின் பிறப்புத் தொடர்பாய் தேவதூதர்கள் இடையர்க்கு வெளிப்படுத்தியசெய்தி மூலம் விளங்கிக் கொள்வது.
(1) ஆபிரகாம் காலம் முதல் இறைவன் இடையர்கள் மட்டில் விசேடகவனம் செலுத் தியுள்ளார் என்பதாகும்.
(2) இறைவனை அறிந்து கொள்ள அவசியமானது விசுவாசமும்அன்புமேயன்றி,பெரும் பட்டப்பற்று என்பதாகும்.
(3) கிறிஸ்துவின் பிறப்புத்தொடர்பாய் இறைவாக்கினர்களால்அறிவிக்கப்பட்டிருந்த இறைவாக்குகள் அனைத்தும் நிறைவேறியது என்பதாகும்.
(4) இறைவன் எவரையும் விசேடமாய் கவனியாது அனைவரையும் சமமாகக் கவ னிக்கிறார் என்பதாகும்.

03) தூதுப் பணிக்கென அனுப்பப்பட்ட அப்போஸ்தலர் பன்னிருவருக்கும் இறிஇறு அதிகாரங் களைக் கொடுத்தது.
(1) அலகைகளைத் துரத்துவதற்காகும்
(2) நோயாளரைக் குணப்படுத்துவதற்காகும்
(3) இறை அரசை அறிவிப்பதற்காகும்
(4) மேற்கூறிய அனைத்திற்குமாகும்

04) இறை தந்தைக்கு மிக உன்னதமானதும், தூய்மையானதுமான ஆராதனை செலுத்தும் வழி.
(1) பலிப் பூசையாகும் (2) மாலை வழிபாடாகும்
(3) நற்கருணை ஆராதனையாகும் (4) திருமணித்தியாலமாகும்

05) திருச்சபையில் நாம் அங்கத்துவம் அடைந்தது;
(1) உறுதிபூசுதலினாலாகும் (2) நற்கருணையினாலாகும்
(3) திருமுழுக்கினாலாகும் (4) பலிப்பூசையினாலாகும்

(06) கிறிஸ்தவ இளைஞர்களின் முன்மாதிரி எனக்கருதப்படுபவர்:
(1) புனித பற்றிக் (2) புனித பவுல் இன்னப்பர்
(3) புனித அந்தோனியார்
(4) புனித அலோசியஸ் கொன்சாகாஞானப்பிரகாசியார்

07) இறைவன் மிக ஆழமான முறையில் தம்மை எமக்கு வெளிப்படுத்தியது;
(1) மோயீசன் மூலமாகும் (2) யாக்கோபு மூலமாகும்
(3) கிறிஸ்து மூலமாகும் (4) பவுலின் மூலமாகும்

08) அப்போஸ்தலன் என்பதன் பொருள்;
(1) ஊழியன் என்பதாகும் (2) பின்பற்றுபவன் என்பதாகும்
(3) அனுப்பப்பட்டவன் என்பதாகும் (4) சீடன் என்பதாகும்

09) பெரிய வியாழன் அன்று இயேசு நிறுவிய திருவருட் சாதனங்களாவன:
(1) ஒப்பரவும் நற்கருணையுமாகும் (2) திருமுழுக்கும் குருத்துவமாகும்
(3) நற்கருணையும் குருத்துவமுமாகும் (4) குருத்துவமும் திருமணமுமாகும்

10) பெண்களிடம் பிறந்தவர்களுள் ---- மேலானவர் யாருமில்லை இம் மேற்கோளின் வெற் றிடத்துக்குக் கீழ்காண்பவற்றுள் பொருத்தமாய் அமைவது.
(1) சலமோன் அரசருக்கு (2) ஆதிப்பிதாப்பிதா ஆபிரகாமுக்கு
(3) இறைவாக்கினர் எலியாசுக்கு (4) அருளப்பருக்கு

11] ''உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே...... இருக்கும்''
கீழ் காண்பவற்றுள் மேற்காணும் வெற்றிடத்துக்கு பொருத்தமாய் அமைவது;
1) முடிவு 2) உள்ளமும் 3) வாழ்வும் 4) மாளிகையும்

12] சிறு வயதில் இருந்தே தன் ஆன்மீக வாழ்வை பெரிதாக எண்ணி, சுத்த கருத்துடன் துற வற வாழ்வு வாழ்ந்தவர்;
1) புனித இக்னேசியஸ் 2) புனித சவேரியார்
3) புனித வின்சன் டிபோல் 4) புனித அலோசியஸ் கொன்சாகா

13] இயேசுவின் சீடர்களுள் நற்செய்தி எழுதியோர்
1) மாற்குவும் லூக்காவுமாகும் 2) மத்தேயுவும் அருளப்பருமாகும்
3) லூக்காவும், மத்தேயுமாகும் 4) அருளப்பரும் மாற்குவுமாகும்

14] ''நான் சொல்லுவதைச் செய்யாமல் ஆண்டவரே ஆண்டவரே என்றுஎன்னை நீங்கள் அழைப்பானேன்'' என இயேசுகூறிய இவ்வசனம் கீழ்க்காணும் எந்த உவமையுடன் தொடர்புடையது
1) விதைப்பவன் உவமையுடன் 2) பலனளிக்காத அத்திமர உவமையுடன்
3) நல்ல சமாரியன் உவமையுடன் 4) அத்திவாரங்கள் இரண்டு பற்றிய உவமையுடன்

15] சக்கரியாஸ்
1) யூதமுதியோர் 2) யூதஇறைவாக்கினர்
3) யூதத்தலைவர் 4) யூதகுரு

16] பழைய புதிய ஏற்பாடுகளுக்கிடையில் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒளித்தூணாக அமைபவர்
1) இறைவாக்கினர் எலியா 2) சக்கரியாஸ்
3) திருமுழுக்கு அருளப்பர் 4) புனிதசூசையப்பர்

(5ஆம்பக்கம் பார்க்க)

## வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தீவுப்பகுதி வீதிகள் திருத்தம்

(ஈச்சமோட்டை)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்ப்பாணம், பளைப் பகுதிக்குட்பட்ட, பாவனையில் பெரிதும் ஈடுப டுத்தப்படுகின்ற வீதிகள் துரி தகதியில் திருத்தஞ்செய்யப் படுகின்றன

மந்திகையிலிருந்து புலோலி வரையான 4 கிலோ மீற்றர் வீதியும், வேலணை புங்குடு தீவு, குறிகாட்டுவான் வீதி யும், காரைநகர் வீதியும் இச் சபையினால் திருத்தஞ் செய் யப்படுகின்றன.

தீவுப்பகுதி வீதிகள் கடந்த 50 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. இடைப் பட்டகாலப் பகுதியில் இவ் வீதிகள் திருத்தஞ் செய்யப் படாததனால் தீவுப் பகுதிக்கு பயணஞ் செய்யும் பயணிகள் பெருஞ் சிரமத்தினை எதிர் நோக்கி வந்தனர்.

தற்பொழுது இவ் வீதிகள் முழுமையாக செப்பனிடப் படுவதனால் போக்குவரத்துச் சிரமம் பெரிதும் குறையும் என பொதுமக்கள் எதிர்பார்க் கின்றனர். (செ-59)

## ஊதியம் வழங்கப்படாததனால் ஊழியர்கள் திண்டாட்டம்

(தென்மராட்சி)

பரந்தன் இரசாயனக் கூட் டுத்தாபனத்தில் வேலை செய்து வந்த சுமார் 105 க்கு மேற்பட்ட பல்வேறு தரத்தி லான ஊழியர்களுக்கு இவ் வருடம் இதுவரை அவர்களுக் கான மாதாந்தச் சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக இவ் ஊழி யர்கள் பலவிதமான கஷ்டங் களை அனுபவித்துவருகின்ற னர். தம்முடைய சம்பளத்தை வழங்கும்படி கொழும்பி லுள்ள கூட்டுத்தபானத்தின் தலைமையகத்துக்குக் பலதட வைகள் கோரிக்கை விடுத்தி ருந்தும் இதுவரை எவ்வித மான பதிலும்கிடைக்காமை குறித்து ஊழியர்கள் மிகுந்த அதிருப்தியும் வேதனையும் அடைந்துள்ளனர் என அறியப் படுகின்றது. (செ-77)

## கிழக்குப்பத்திரிகையாளர் தாக்குதலின் எதிரொலி உஷார்நிலையில்பொலிசார்

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் நடை பெற்ற ஆர்ப்பாட்ட மொன் றின் போது செய்தி சேகரிக் கச் சென்ற கிழக்கு மகாணத் தின் பிரபல பத்திரிகையாள ரான ரி.எல்.ஜெளபர்கான் தாக்கப்பட்டும், துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உள்ளாக் கப்பட்டதுமான சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் நடவடிக்கை களை மேற்கொண்டுள்ள னர்.

மேற்படி சம்பவம் தொடர் பாக நேற்று முன்தினம் சந் தேகத்தின் பேரில் ஐவர்கைது செய்யப்பட்டதுடன் அவர்க ளின் வாக்குமூலங்களும் பதி வுசெய்யப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்கள் விடு தலை செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பி.சிறிபால தெரிவித்துள் ளார்.

மேற்படி நபர்கள்மீது வழக் குத்தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும் தெரி விக்கப்படுகிறது. (சு-60)

## புத்தளம் பகுதியில் 300 தமிழ் மொழிமூல ஆசிரியர் விரைவில் நியமிக்கப்படுவர்

### ஜனாதிபதி இணக்கமாம்

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் சுமார் 300தமிழ் மொழிமூல ஆசிரி யர்களை நியமிப்பதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

ஜனாதிபதிசந்திரிகா குமா ரதுங்காவின் பணிப்புரைக் கமைய இவர்கள் உடனடி யாக நியமனம் பெறவுள்ள னர்.

இதனால் வடபகுதியிலி ருந்து இடம் பெயர்ந்து புத் தளம் பகுதியில் வசித்து வரும் சுமார் 12 ஆயிரம் குடும்பங்க ளைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி வளர்ச்சி பெறுவர் எனக் தெரியவருகிறது. (4)

## சேறும் சகதியுமான நிலையில் மருதனார்மடம் சந்தை

மழை காலம் ஆரம்பித்து விட்டபடியினால் மருதனார் மடம் சந்தை சேறும் சகதியு மாகக் காணப்படுகின்றது.

இதனால் வாடிக்கையாளர் களும் வியாபாரிகளும் சகதி யில் வழுக்கி விழுந்தெழும்பு கிறார்கள்.

அத்துடன் இச்சந்தையில் அமைந்துள்ள சைக்கிள் பாது காப்பு நிலையத்திற்கு கூரை அமைக்கப்படாததனால் சைக்கிள்கள் மழையில் நனை வதாகவும் பொது மக்கள் அதிருப்தியடைகிறார்கள். (செ-106)



பாராளுமன்றத் தேர்தல் யாழ். மாவட்டம் 10-10-2000

தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட, தந்தையின் இலட்சியம் வென்றிட, தந்திடுவோம் எம் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கே!

தமிழர் விடுதலைக் கூட்டணி

### இன்று ஒரு தகவல்

## இறைவனையே அடைக்கலம் அடைந்தால் இடர்களில் இருந்து களைவான்

பகவாதனையன்றி வேறெதையும் அறவேநாடகமலிருப்பதே உண்மை பக்தனின் தலையாயலட்சணம்வேறுஎது எதற்காகவோ அவனை நாடுவதே பக்தரென்று நினைத்து கொண்டிருப்போரில் மிக பெரும் பாலோரின் எண்ணமாக இருக்கிறது.

அப்படியான பக்திக்குஇலக்கணமாக கூரேசர் கொண்டிருந்தார்.

ராமாநுஜனின் காலத்தில் கூரம் எனும் சிற்றூரில் கிராம அதிகாரியாக இருந்தவர்கூரேசர். ஸ்ரீவத்ஸாங்கர் என்பது அவர் பெயர் ஊர் பெயரால் கூரேசர் எனப்பட்டார் மிகப் பெரிய செல்வந்தர்.

விசிஷ்டாத்வைதத்தின் பெரும் ஆசார்யரான ராமநுஜரின் ஸிந்தாந்தத்தை அவர் ஏற்று ராமாநுஜரைப் பின்பற்றலாம். அதிலிருந்து அவரது மனப்போக்கு வெகுவாக மாறிவிட்டது [illegible] நில புலன், வீடு வாசல் மற்ற எல்லா சொத்துக்களையும் தியாகம் செய்தார் ஆண்டாள்என்ற தம்முடைய பத்தினியை அழைத்துக் கொண்டு காவேரி சூழ விளங்கும் ஸ்ரீரங்கத்துக்குப் புறப்பட்டான்.

செல்வழியில் இரவு வேளையில் ஓர் அடர்ந்த காட்டில் பிரயாணம் செய்யநேர்ந்தது.

'இருடர்கள் இருப்பார்களோ? என்று நடுங்கும் குரலில் கேட்டாள் ஆண்டாள்.

அதைப்பற்றி நாம் ஏன் பயப்பட வேண்டும் நம்மிடம் திருடி எடுத்துச் செல்ல என்ன இருக்கிறது. என்று கூரேசர் அமைதியாகக் கூறினார்.

'நாதா! மன்னிக்க வேண்டும் தாங்கள ஸந்தியாவந்தனத்துக்குத் தீர்த்தம் கேட்டால் ஏதோ மண்பாண்டத்தில் கொண்டுதர எனக்கு மனம் வராது போலிருந்தது எனவே அதற்காக மட்டும் ஒரு சிறிய தங்கப் பஞ்ச பாத்திரத்தை வைதித்துக் கொண்டு மற்றவற்றைத்தான் தானம் செய்தேன்' என்றாள் ஆண்டாள்.

உடனே கூரேசர் 'எங்கே அதைக்காட்டு' என்றார்.

அவள் புடவையில்மறைத்து வைத்துக் கொண்டிருந்த பொற்பாத்திரத்தை எடுத்து பர்தா விடம் நீட்டினாள்.

அதை வாங்கிக் கொண்ட கூரேசர் காட்டுக்குள் நெடுந்தூரம் தாண்டி அது விழும் படியாக வீசி எறிந்தார்.

அப்புறம் நிர்ப்பயமாக யாத்திரை தொடர்ந்தனர்.

ஸ்ரீரங்கம் நெருங்கிற்று ஆயினும் புறப்பட்டதிலிருந்து மூன்று நாட்களாகக் கூரேசர் எதுவும் கோவில் வரை செல்ல இயலாமல் அருகிருந்த ஒரு சத்திரத்துக்குள் சென்று அப்படியே மயங்கி விழுந்தார்.

ஆண்டாளின் செவியில் ஆலய மணி முழக்கம் கேட்டது. ஸ்ரீரங்கநாதருக்கு நிவேதனம் நடக்கிறதென்றுபுரிந்து கொண்டாள். கூரேசருக்கு ரங்கேசர் தெய்வம் என்றால் அவளுக்குப் பதிதானே தெய்வம்? எனவே பகவானிடம் கோபித்தாற்போல் 'இங்கே உன் அடியார் பட்டினியில் வாடிக் களைத்து விழுந்திருக்கிறார் யாவும் அறிந்த உன்னால் எப்படி அங்கே விதவிதமான நிவேதனத்தை விருந்து கொள்ள முடிகிறது?' எனக் கேட்டாள்.

சில நிமிடங்களில் தெருவில் வேத கோஷமும், ஆழ்வார்கள்பாடலும், மேளதாளமும் கேட்டது. அதுசத்திரத்துககே நெருங்கி வந்தது.

பட்டர்கள் தட்டுத் தட்டாக போஜன பதார்த்தங்களை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தனர். இங்கே கூரேசர் என்ற பெயரில் உள்ள பக்தசிகாமணியார் ஸ்ரீரங்கநாதரே அவருக்கு அமுது செய்விக்கும் படி அசரீரியாக ஆக்ஞாபித்திருக்கிறார் என்றார்கள்.

கூரேசரின் மயக்கம் தெளிந்து அவர் எழுந்திருந்தார் பகவானேஉணவு அனுப்பியிருக்கிறாரென்பதில் அவர் நன்றிப் பெருக்கோமகிழ்ச்சிப் பெருக்கோ அடையவில்லை. மாறாக 'ப்ரயோ என்றோ ஒருநாள் நசிக்கவேண்டியதும்.

அநாத்மா என்று இன்றே புறக்கணிக்க வேண்டியதுமான உடலையும் உடலுக்கான உணவையுமா நான் விரும்பினேன்? களைத்து விழுந்தாலும்அப்படியேஉயிர் நீங்கி உன்னை அடையத் தானே வேண்டினேன்? எனக்குத் தேவையில்லாததைநான் பிரார்த்திக்காததை நீ எப்படித் தரலாம்? என் தேவைக்காக நான் பிரார்த்தித்து வேண்டும் உன்னை எப்படித் தராது போகலாம்? என்றே கேட்டார்.

ஆயினும் பட்டர்கள் பகவானின் பிரசாதத்தை அவர் மறுக்கக் கூடாது என்றவுடன் மிகுந்த பணிவுடன் வாயிலிட்டுக் கொண்டார். பத்தினிக்கும் சிறிது அளித்து 'ஒரு வேளை நீதான் அந்த அபசாரம் செய்து விட்டாயோ? எனக்கு உணவு சேகர்ப் பிரார்த்தித்தாயோ? என்று கேட்டார்.

அவள் 'நாதா! பகவந்தனிடம் எதையுமே கோரக் கூடாது என்ற தங்களுடைய உயர்ந்த விரதத்தை அறிந்த நான் அதற்குப் பங்கம் விளையுமாறு ஒருபோதும் பிரார்த்திக்கவில்லை உங்களுக்கு உணவு தரச் சொல்லி நான் கேட்க வில்லை கருணாந்தரங்கனாகிய அந்தக் கஸ்தூரி ரங்கனுக்கு எப்படி பக்தர்பசியுற்க்க கிடக்கையில் நிவேதனம் கொள்ள மனம்வருகிறது என்றே கேட்டேன் என்றாள்.

ரா. கணபதி
அறிவு அறுபது

# நீர்ப்பீடன குறைபாட்டை ஏற்படுத்தும்

# 'எய்ட்ஸ்' நோயின் கொடூரம்

மத்திய ஆபிரிக்காவில் இந்நோய் முதன் முதலாகத் தோன்றியதாக நம்பப்படுகின்றது. ''பச்சைச் குரங்கு'' எனும் ஒருவகைக் குரங்கில் இருந்து இந்நோய் மனிதனுக்குத் தொற்றியது என நம்பப் படுகின்றது. 1981ம் ஆண்டு இந்நோய் முதலில் அமெரிக்காவில் அறியப்பட்டது. தற்போது இலங்கையுட்பட்ட 71க்கும் மேற்பட்ட நாடுகளில் இக் கொடியநோய் பரவியுள்ளது.

இது ஒரு வைரஸ் நோயாகும். இது எச் ஐ வி எனப்படும் ஆர்.என்.ஏ வைரஸ் ஆகும். உத்தியோக பூர்வத் தகவல்களின் படி உலகில் 10 மில்லியன் மக்கள் இவ்வைரஸ் காவிகளாக உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எச் ஐ.வி எனும் வைரஸ் மனிதனின் உடற்கலங்களின் உள்ளே புகுந்து 'றிவேர்ஸ் ரான்ஸ்கிரிப்பேஸ்' எனும்

## மருத்துவ விளக்கம்

நொதியத்தைப் பயன்படுத்தி மீளப்பிரதி எடுத்தல் முறையினால் தனது ஆர்.என்.ஏ யிலிருந்து டி.என்.ஏ.ஐ உருவாக்குகின்றது. இவ்வைரஸ் 'புரோவைரஸ்' என அழைக்கப்படும்.

இவ்வைரஸ் விருந்து வழங்கிக் கலத்தில் பெருகுகையில் டி.என்.ஏ.யும் பெருகுகின்றது. பின் பெருகிய நிலையில் மீண்டும் சாதாரண வைரஸ் ஆகின்றன.

எச்.ஐ வி, குருதியில் உள்ள 'ரி-4' நிணநீர்க் குழியங்களைத்தாக்கி உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை இழக்கச் செய்கின்றது. இதனால் இலகுவாக வேறு நோய்கள் தொற்ற நேரிட்டால் இறப்பு ஏற்படுகின்றது:

எய்ட்ஸ்க்குரிய நோயரும்பு காலம் 2-சில வருடங்களாகும். இக்காலப் பகுதியில் அவர்களில் எய்ட்ஸ்க்குரிய குணம் குறிகள் அவர்களில் வெளிக்காட்டப்படுவதில்லை இக்காலப் பகுதியிலேயே இவர்கள் அதிகளவில் நோயைப் பரப்புவார்கள். எச் ஐ வி, சந்ததிக்குச்சந்ததி தனது புரத உறையை மாற்றிக் கொள்வதால் எய்ட்ஸ்க்கு மருந்து கண்டுபிடிக்கல் குதிரைக் கொம்பாகவே இருந்து வருகின்றது. எச் ஐ வி வரஸ் மனித உடலில் பின்வரும் இடங்களில் காணப்படுகின்றது.

- ★ குருதி முதலுரு
- ★ இழையப் பாய்பொருள்
- ★ பெண்களின் இனப்பெருக்கத் தொகுதிக்குரிய சுரப்புக்கள்
- ★ ஆண்களின் சுக்கிலம்
- ★ மூளைய முண்ணான் பாய்பொருள்

கண்ணீர், உமிழ்நீர், சிறுநீர், முலைப்பால் ஆகியவற்றிலும் இவ்வைரஸ் காணப்படுகின்ற போதிலும் இவற்றால் தொற்றுவது இதுவரை அறியப்படுவதில்லை என்றே கூறலாம்.

எச் ஐ.வி. பரவும் வழிகள்

- ★ இருபால் கலப்பின் மூலம்- பெரும்பான்மைக்குரியது.
- ★ தன்னினச் சேர்க்கை மூலம்
- ★ குருதிமாற்றீட்டின் மூலம்
- ★ மருந்து ஏற்று ஊசிகள் மூலம்
- ★ தாயிடமிருந்து சேய்க்கு

எச். ஐ. வி. பரவாத முறைகள்

- ★ உணவுப் யாத்திரங்கள் மூலம்
- ★ தற்செயலான தொடுகை
- ★ மலகூடம்மூலம்
- ★ தும்முதல், இருமுதல் மூலம்
- ★ நீச்சல் தடாகங்கள்மூலம்
- ★ பூச்சிகள்மூலம்

எய்ட்ஸ்க்குரிய குணங்குறிகள் சளிச்சுரம் காணப்படல், வயிற்றோட்டம் ஏற்படல், உடல்நிறை குறைதல், இராக்காலங்களில் வியர்த்தல், தோலிலும் நாக்கிலும் மாறாதபுண்கள் ஏற்படல், தோலில் கழலைகள்ஏற்படல் போன்றனவாகும். இவ் அறிகுறிகள் காணப்படுபவர்கள உடனடியாக தம்மை வைத்திய பரிசோதனைக்குட்படுத்தி தாம் நோய்க்காவிகளா இல்லையாஎன்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

நரேன்

இக்கொடிய நோயில் இருந்து தப்புவது மிக எளிதானகாரியமே. வந்தபின் மனம்புழுங்கி கொஞ்சம் கொஞ்சமாக உயிர்விடுவதிலும் வருமுன் காத்துக் கொள்ள பின்வரும் வழிமுறைகளைக் கைக்கொள்ளலாம்.

1) திருமணம்செய்த சோடிகளிடையேமட்டும் இனப் பெருக்கம்செய்தல்

2) ஆண்கள் தடுப்புறைகளைபயன்படுத்தல்

3) நன்கு பரிசோதிக்கப்பட்ட பின்னர் குருதிமாற்றீடு செய்தல்

4) போதைவஸ்து ஏற்றூசிகளைப் பாவித்தலை தடுத்தல்

5) நோயுள்ள தாய்மார் குழந்தைபெறுவதை தடுத்தல் எனவே கண்ணியமாக வாழ்ந்து நமக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்போமாக

## கிறிஸ்தவம் . . .


(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

17] மோயீசனின் சட்டங்களை நுணுக்கமாக கடைப்பிடித்த ஒரு யூதன்
1) திருமுழுக்கு அருளப்பர 2) இராயப்பர் பேதுரு
3) சின்னப்பர் பவுல் 4) முடியப்பர் ஸ்தேவான்

18] உறுதிபூசுதல் பெற்றவரின் கடமைகள் ஆவன
1) சமூகப் பணிகளில் ஈடுபடல் 2) பங்குப் பணிகளில்பங்குபற்றல்
3) மறைத்தூதுவப்பணிகளில் பங்களியாதல்
4) முதிர்ச்சிபெற்ற கிறிஸ்தவனாக வாழ்தல்

19] கிறிஸ்மா தைலம் பூசப்படும் 3 திருவருட் சாதனங்கள்
1) திருமுழுக்கு - நோயில் பூசுதல் 2) திருமுழுக்கு - உறுதிபூசுதல் - குருத்துவம்
3) திருமுழுக்கு - உறுதிபூசுதல் - நோயில்பூசுதல்
4) திருமுழுக்கு - மெய்விவாகம் - குருத்துவம்

20] இறைவன் தூயவர் எனநாம் கூறுவது
1) அவர் எப்போதும் நன்மையை விரும்புவதால்
2) அவர் எப்பொழுதும் எல்லாவற்றையும் அறிவதனால்
3) அவர் எப்பொழுதும் மன்னிப்பு அளிப்பதனால்
4) அவர் எப்பொழுதும் எமக்கு அருகில் இருப்பதால்

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்திற்காகவும்
வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்



சுபத்திரன் (றொபேட்)

சுயேச்சைக்குழு - 2 X

அ. வரதராஜப் பெருமாள்

(ஈ. பி. ஆர். எல்.எஃப்)

(1765)

## சத்திர சிகிச்சைக்கு உட்படவுள்ள இந்திய பிரதமர் வாஜ்பாய்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு கால்முட்டு அறுவைச் சிகிச்சை நடைபெற இருக்கிறது.

ஒக்ரோபர் மாதம் புதுடில்லியில் அறுவை சிகிச்சை நடைபெற இருப்பதாகவும் இதற்கு அமெரிக்காவைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் வரவிருப்பதாகவும் புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடல் பிஹாரி வாஜ்பாய் கடந்த இரண்டு ஆண்டுகளாக கால் மூட்டு வலியால் பாதிக்கப்பட்டிருந்தாரென்றும் பல பொது வைபவங்களை இதனால் குறைத்துக் கொண்டதாகவும் அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த பொழுது இராணுவ அணிவகுப்பை கதிரையில் இருந்து கவனித்துக் கொண்டிருந்ததெல்லாம் இந்த மூட்டுவலியாலே என்று சொல்லப்படுகிறது. (து)

## கூட்டுபோர்ப்பயிற்சியில் ஜப்பான்-இந்திய கப்பல்கள்

(ரோக்கியோ)

ஜப்பான்போர் கப்பல்களும் இந்தியப் போர் கப்பல்களும் கூட்டாக போர்ப்பயிற்சியில் ஈடுபட இருக்கின்றன.

இந்தியாவிலிருந்து இரு கடற்படைக் கப்பல்கள் ஜப்பான் கடல் பிரதேசத்துக்குச் சென்றுள்ளதாகவும் வருகிற 25 ஆம் திகதி ஜப்பான் கப்பல்களுடன் இணைந்து போர்பயிற்சிகளில் ஈடுபடுமென்றும் தெவிக்கப்படுகிறது.

அங்கு சென்றுள்ள இந்தியக் கப்பல்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு தினங்கள் ஜப்பானிய துறைமுகத்தில் தங்கியிருக்கும் இந்திய கடற்படை அதிகாரிகளுக்கும் ஜப்பான் கடற்படை அதிகாரிகளுக்குமிடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற இருக்கிறது. (து)

## எண்ணெய் நாடுகளின் மகாநாடு விலை யேற்றத்தை குறைக்க உதவும்

(வெனிசுலா)

நடைபெற இருக்கும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் 2 வது உச்சிமகாநாடு நல்ல வழிமுறைகளைக் காணுமென்று வெனிசுலா நாட்டு அமைச்சர் கூறியிருக்கிறார்.

எண்ணெய் விலை யேற்றம் பலகாரணங்களால் உயர்ந்துவிட்டதென்றும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் எண்ணெய் வியாபாரத்தில் தலையீடுகள் கொடுப்பதால் பற்றாக்குறையும் விலையேற்றமும் ஏற்படுகிறதென்றுவெனிசுலா நாட்டு அமைச்சர் அலிரொட்டறிக் செய்தியாளர்களுக்குக் கூறுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்; எண்ணெய் உற்பத்தி நாடுகளின் 2 வது உச்சிமகாநாட்டில் எண்ணெய் உற்பத்திகள் பற்றியும் விலை நிர்ணயங்கள் பற்றியும் ஆராயப்படும் என்றும் கணிசமான அளவு எண்ணெய் உற்பத்தியைக் கூட்ட வழிவகுக்குமென்றும் அதேவேளை விலையும் இறங்குவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவென்றும் அமைச்சர் ரொட்டறிக தெரிவித்தார்.

இதேவேளை வெனிசுலா எண்ணெய் உற்பத்தியில் முக்கிய இடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (து)

## நோய்வாய்ப்பட்ட நிலையில் கன்னடநடிகர் ராஜ்குமார்

கன்னடநடிகர் ராஜ்குமார் திடீரென நோய்வாய்ப்பட்டு படுத்தபடுக்கையாக இருக்கிறார்.

கடந்த சில தினங்களாக ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மாள் இருதய நோயால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்ற வானொலிச் செய்தியை கேட்டதால் தான் மனமுடைந்து காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறாரோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறதென்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை காட்டில் கடும் மழை பெய்வதால் சுவாத்தியம் ஒத்து வராமல் காய்சலால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் அவருக்கு தகுந்த மருந்துவாங்குவதற்காகவீரப்பன் தனது கூட்டாளிஒருவரை தாளவாடிப்பகுதிக்கு அனுப்பியிருப்பதாகவும் மேலும் அறியப்படுகிறது.

இதேவேளைநக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால் இன்னும் வீரப்பனை சந்திக்கவில்லையென்றும் தெரியவருகிறது. (து)

## தீவிரவாதிகள் மீது படையினர் தாக்குதல்; 100 பேர் பலி

### பிலிப்பைன்சில் சம்பவம்

[மணிலா]

பிலிப்பைன்சில் பிணையாட்களைப் பிடித்து வைத்திருக்கும் தீவிரவாதிகள் மீது இராணுவம் தாக்கியதில் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மணிலாவிலிருந்து தொலைவிலுள்ள தெற்குத் தீவு ஒன்றில் பிணையாட்களாகப் பிடித்து வைத்திருக்கும்கிளர்ச்சியாளர்கள் மீது இத்தாக்குதல் நடைபெற்றது.

மலைப் பிரதேசமான இத்தீவில் பிணையாளிகளை மீட்பதும் தீவிரவாதிகளுடன் போரிடுவதும் மிகச்சிரமமான காரியமென்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்கு உள்ளூர் வாசிகள் உதவியாட்களாக இருக்கிறார்களென்றும் ஆனால் தாக்குதல் தொடங்கி 10 நாட்களாகியும் 17 பிணையாட்களை விடுவிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து)

## நகரசபை பிரதிநிதிகள் உண்ணாவிரதம்

(சென்னை)

நாகர் கோயில் நகரசபை மீது பல பாரிய குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி 15 நகரசபை உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

பாரதிய ஜனதா, அண்ணா திராவிடமுன்னேற்றக்கழகம், தமிழ் மாநில காங்கிரஸ்மார்க்ஜிஸ் கம்யூனிஸ் ம: தி: மு: க ஆகியகட்சிகளைச் சேர்ந்த15 நகரசபைப்பிரதி நிதிகள்உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நாகர் கோயில் நகர சபைக்கு அண்மையிலுள்ள அண்ணா விளையாட்டாரங்கில் இத்தொடர் உண்ணா விரதம் நடப்பதாகவும் நகரசபையும் இவர்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பதாயில்லையென்றும் பிரச்சனை இழுபறியில் இருக்கிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## முப்படைகளும் ஒருங்கே நடத்திய ஈரான் இராணுவ ஒத்திகை

(தெஹிரான்)

ஈரான் நேற்று பாரிய இராணுவ ஒத்திகை ஒன்றை நடத்தியுள்ளது.

ஈரான் ஈராக் யுத்த தொடங்கி 20 ஆம் ஆண்டை நினைவுறுகூருமுகமாக இந்த இராணுவ ஒத்திகை நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஒத்திகையின் போது புதுப்புது ஆயுதங்களும் பீரங்கிகளும் நவீனரக விமானங்களும் பயன்படுத்தப்பட்டது.

இது ஒரு பாதுகாப்பு ஒத்திகைவிழாவென்று ஈரான் அரசால் அறிவிக்கப்பட்ட போதிலும் உயர் இராணுவ கடற்படை விமானப்படை அதிகாரிகள் இந்த இராணுவ ஒத்திகையில் கலந்து கொண்டனர்.

இதே வேளை மக்கள் பேரணிகளும் ஊர்வலங்களும் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. (து)

## மேற்கு வங்கத்தில் ஆளுநர் ஆட்சி வேண்டும் என்கிறார் பி.ஜே. பி தலைவர்

(புதுடில்லி)

மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்த வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் பங்காருலக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

தலைவர் பங்காருலக்ஷ்மன் மேற்குவங்கத்தில் பாதிக்கபட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டு விட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி வாக்குறுதிகளும் கொடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாநில அரசுக் கட்சிகளால் பி. ஜே. பி தொண்டர்களும் திருநாமல் காங்கிரஸ் தொண்டர்களும். கொலை செய்யப்பட்டதைச் கேட்டறிந்து, மேற்கு வங்கத்தில் வன்முறைகள் தலைவிரித்தாடுவதை உணர்ந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்தே ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டு வரப்படவேண்டும் என்ற கருத்தினை தெரிவித்துள்ளார். (து)

## அரசுத்தலைவரின் பதவிக்காலம் குறித்த தேர்தல் பிரான்ஸில் நடந்தது

(பரிஸ்)

அரசு தலைவரின் பதவிக் காலம் குறித்த முடிவை எடுக்கும் தேர்தல் கணிப்பீடு பிரான்சில் நேற்று நடைபெற்றது.

ஏழு ஆண்டுக் கொருதரம் பிரான்ஸில் அதிபர் தேர்தல் நடைபெற்றது. ஆனால் இனி 5 ஆண்டுகள் தலைவராக இருக்க வழி செய்யும் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இத் தேர்தலில் 4 கோடி மக்கள் வாக்களித்துள்ளனர். என்றும் இத்தேர்தலின் முடிவு பாராளுமன்றக் கூட்டத்தில் அறிவிக்கப்படுமென்றும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸின் முன்னாள் அதிபர் ஜெற்பாய் இந்த ஆட்சிக் காலத்தை 5வருடங்களாகக் குறைக்க வேண்டும் என்று கடந்த இரண்டு வருடங்களாக வலியுறுத்தி வந்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

## பங்களாதேஷில் பெரும் ஆர்ப்பாட்டம் படைஅதிகாரிகள் ஈடுபட்டனர்

சுதந்திரயுத்தத்தின்போது, பாகிஸ்தானியர் புரிந்த அட்டூழியங்களுக்காக அவர்கள் மன்னிப்புக்கோர வேண்டும் எனக்கூறி பங்களாதேஷ் மூத்த யுத்த வீரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அமைந்துள்ள பாகிஸ்தான் தூதரகம் முன்பாக நூற்றுக்கணக்கான மூத்த யுத்த வீரர்கள் கூடி நின்று ஆர்ப்பாட்டங்கள் புரிந்தனர்.

1971 ஆம் ஆண்டு நடைபெற்ற 9மாதகால பங்களாதேஷ் சுதந்திர யுத்தத்தின் போது, பாகிஸ்தான் படைகளால் 30இலட்சம் பங்களாதேஷ்மக்கள் கொல்லப்பட்டனர்.

4 இலட்சத்திற்குமேற்பட்ட பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர், பல கோடி லட்சரூபா பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப்பட்டது.

மேற்படி கொடுமைச் செயல்களுக்கு மன்னிப்புக் கோரவேண்டும்எனக் கூறியே இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை, பங்களாதேஷில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் மூடப்பட வேண்டும். அங்கு தங்கியுள்ள பாகிஸ்தானியர் சொந்தநாடு திரும்பி விட வேண்டும். பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு மேற்குறிப்பிட்ட சம்பவங்களுக்கு மன்னிப்புக் கோர வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (உ)

### வடமராட்சி கிழக்கில்

## பெயர் கூறமுடியாத அளவு பாடசாலைகள் செயலிழப்பு

(செம்பியன்பற்று)


அண்மைய யுத்தஅனர்த்தங்களின் காரணமாக வடமராட்சிகிழக்குப்பகுதியில் 80 வீதமான பாடசாலைகள் செயலிழந்துள்ளன.

இவ் 80 வீதத்தில் 20வீதமான பாடசாலைகள் பெயரைக் கூட கூறமுடியாதவாறு முற்றாகச் செயலிழந்துள்ளன.

மேற்படி செயலிழந்த நிலையிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் வேறு பாடசாலைகளில் தமது கல்வியைத் தொடருகின்றனர்.

இவ்வாறு வேறு பாடசாலைகளில் கல்வியைத் தொடருவதனால் இம் மாணவர்கள் கல்வியைப் பூரணமாக பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக பெற்றோர்களும் மாணவர்களும் ஆசிரியர்களும் விசனம் தெரிவிக்கின்றனர். (செ-42)

யாழ். இந்து மாணவன் சஞ்சீவனின் கொலையை சர்வதேசமெங்கும் ஒலிக்க வைத்த இந்துக்கல்லூரியின் பழைய மாணவனை பாராளுமன்றம் அனுப்பிவைக்க
ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள்



X | 8 | X

இல; 8ல் உங்கள் X யைப் போடவும்

(இ823)

நல்லாண்மை என்பது
ஒருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை ஆக்கிக்கொளல்
- குறள் -

# வலம்புரி

## ஏக்கப் பெருமூச்சு

இரண்டு தமிழ்க் கைதிகளை நம்பி திறந்த கவுச்சிறை அறையில்விடலாம். காரணம் அவர்கள்தமிழர்களான காரணத்தால் இதயக் கதவு தாளிட்டுக்கிடக்கிறது. பரந்த நோக்குப விரிந்த மனப்பாங்கும் எம்மிடை முளை விடுவதெப்போது?. ஒன்றாய் நின்று நன்று பல செய்வதெப்போது?. எனபல்விதமான ஏக்கப் பெருமூச்சுக்கள் எம்மைவெம்மைப்படுத்துகின்றன.

சென்றகாலமும்,செயற்றிறனும் ஒன்று பட்ட நிலையில் இருந்தால் நாங்கள் நிற்குமிடம் வேறு உலகின் பார்வை வியப்போடு எம்மீது விழுந்திருக்கும். மாந்த உணர்வோடு இன்இறுபம்கண்டிருப்போம்.

இன்னுமாபேதம்? எம்மிடையே அதுவளரவேண்டுமா?எத்தனை சித்தாந்தங்கள், சிந்தனைகள், செயலூரக்கங்கள் அவை சிந்தனைத்தெளிவை ஏற்படுத்தவில்லையே.ஆளுக்காள் கரிபூசும் பரிதாப நிலையிலே நாம்.

எம்மை நாம் விமர்சிப்பது ஒரு வகையில்காட்டிக்கொடுப்பதாக அமையாதா? இன்றைக்கு ஏங்கும் இதயங்களுக்குவேண்டுவது சிலு சிலுப்பல்ல பல காரமே. அதனைப் பெற பல காலம் செல்லுமோஎன்று ஏங்கவேண்டியிருக்கிறது புதியகதிரைகள் வந்து வந்து ஐந்துஐந்தாய்த் தவணைபோடுகின்றனவே. இந்த நிலையில் ஒன்று மட்டும் தெளிபுபிறரில் தங்கியிருக்கக்கூடாது என்பதாகும்.

எத்தனையோ ரூபாக்கள்பணவிரயம்,எத்தனை அலைச்சல்கள் இவை அனைத்தையும் தவிர்த்திருக்கலாம். அது ஒரு புறமிருக்க தமிழினம் விழித்துக்கொண்டது என சர்வதேசசமூகம் உணர வைத்திருக்க முடியும். தமிழன் தமிழ் மாநிலமொன்றைப் பெறுவதற்கும் ஆக்கபூர்வமான முதற்படியாக அமைந்திருக்கும்.

பூச்சாண்டி காட்டும் மதவாதிகளின் கைகளிலே அரசியல் ஊசலாடக்கூடாது.மீண்டும் இனவாதம் தலை தூக்குவதாக ஒரு உணர்வு.தேர்தல் நாடகத்துக்காகப் பிதற்றல் பல விதமாய், பல கோணங்களில் தொடர்கிறது. இவற்றைக்கேட்கும் போது எங்கள் விடிவு இப்போதைக்கில்லை என்பது புலனாகிறது

சூழ் நிலையை மாற்றியவர்களோடு துணைக்கரம் நீட்டி ஒத்துழைக்கக்காலம் வந்து விட்டது. கலங்கிய கண்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். மேலும் காலம் தாழ்த்தக்கூடாது ஒன்றாய் நின்று நன்று பலசெய்வோம்.

அன்புடன் ஆசிரியர்

# இந்திய அரசை தலை குனியவைத்த
# திலீபனின் உண்ணா நோன்பு!



இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 15 09 87 நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வட கிழக்கு வீதியில் உண்ணாநோன்பிருந்து உறத் தியாகம் புரிந்ததிலீபனின் 13 ஆம் ஆண்டு நினைவு நாட்களை நினைவு கூர்ந்து இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது ]ஆ-ர்]

'ஒன்பது' இந்த எண்ணில் பிறப்பவர்கள் ஏதோவொரு வகையில் சிறப்புப் பெற்றிருப்பார்கள். பொது வாழ்க்கையில் ஈடுபட்ட எல்லோரும் விடுதலைக்காகப் போராடப் பிறந்தவர்கள் என்று கருத முடியாது.

ஒரு சிலரே அந்தப்போராட்டத்தில் தம்மை முற்று முழுதாக அர்ப்பணித்து வாழ்க்கையையே ஒரு பெரிய போராட்டக்களமாக மாற்றிக் கொள்வார்கள்.

ஆயுதப் போராட்டத்திலும் சரி அகிம்சைப் போராட்டத்திலும் சரி. அவற்றின் விளைவுகளை எதிர் நோக்காமல் தம்மையே அர்ப்பணித்து உயிரைக் கூட துச்சமாக மதித்து போராட தயங்க மாட்டார்கள்.

இது 'ஒன்பது' என் வரிசைக்குரிய குண இயல்பு.

இந்த ஒன்பது என் வரிசையிலேயே தான் திலீபன் என்று அழைக்கப்படும் பார்த்தீபன் ஊரெழு மண்ணில் இராசையா தம்பதிகளுக்கு பிறந்தான்.

'வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பின்புவேறொன்று கொள்வாரோ' என்ற பாரதி பாடலுக்கு இலக்கணமாக மிளங்கி அழியாப் புகழ் பெற்றவன் தியாகி திலீபன்.

நல்லைக் கந்தன் வடகிழக்கு வீதி முனையில் 265 மணித்தியாலங்கள் நீராகாரம் எதுவுமின்றி தமிழனின் விடிவுக்காக தன்னையே அர்ப்பணித்து தியாக தீபமாக ஒளி விட்டு பிரகாசிக்கும் திலீபனின் தியாகம் போற்றத்தக்கதே.

ஐந்து அம்சக்கோரிக்கை

★ பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் உள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

★ புனர் வாழ்வு என்னும்பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்கள குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும்.

★ இடைக் கால அரசு நிறுவப்படும் வரை சகல புனர்வாழ்வு வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

★ வடக்கு-கிழக்குமாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல வேண்டும்.

★ இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படையென அமைக்கப்பட்டோருக்கு வழங்கப் பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளையும் திலீபன் முன்வைத்தபோதும், இந்திய அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளாததே திலீபனின் மறைவுக்கு காரணமாக அமைந்தது.

இந்த ஐந்து அம்சக் கோரிக்கைகள் மீது இந்திய அரசு உருப்படியான நடவடிக்கை எடுத்திருந்தால் திலீபன் ஒரு வேளை உயிர் இழக்காமல் இருந்திருக்கலாம்.

**எனது அவயவங்கள் சிறிது சிறிதாக செயலிழந்து கொண்டே வருகின்றன: இனியொரு மனிதனாக வாழ முடியாது: என்பது எனக்குத் தெரிகிறது.**

இந்தனையும் நடந்து 13 வருடங்கள் கடந்துவிட்டன தனது நாட்டையும் நாட்டு மக்களையும் சிந்தித்து தன்னைத்தானே தியாகம் செய்து மறைந்த தியாகி திலீபனின் மறைவுக்கு இந்திய அரசாங்கமும் பொறுப்பேற்றே ஆக வேண்டும்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தபடி பேச்சுவார்த்தையில் தனக்கு நம்பிக்கை இல்லை. இதனை எங்கள் நாட்டு மக்களுக்கும் உங்கள் நாட்டு மக்களுக்கும் எடுத்துக் கூறுங்கள், என்று திலீபன் தனது இறுதி வேண்டுகோளிலே, தமிழ்நாடு காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் பா.நெடுமாறனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தினமும் காந்திக்கு அஞ்சலி செலுத்தியும் அகிம்சையே தனது கொள்கையென உலகம் முழுவதும் பறைசாற்றிய நாடு இந்தியா. திலீபனின் மரணம் இந்தியாவிற்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

**நான் என்மரணத்தைநேசிக்கிறேன் சாவை சந்தோஷத்துடன் அணைக்கத் தயார். பேசத் துடிக்கிறேன் என்னால் முடியவில்லை. நிலையான முடிவு வரும் வரை எமது போராட்டம் தொடர வேண்டுமென்பதே எமது முடிவு.**

இவையெல்லாம்வரலாற்று நிகழ்வுகள்.

"நான்என் மரணத்தை நேசிக்கின்றேன். சாவை சந்தோசத்துடன்அணைக்கத் தயார். பேசத்துடிக்கிறேன் என்னால் முடியவில்லை நியாயமான முடிவுவரும். எமது போராட்டம் தொடரவேண்டும்என்பதே எமதுவிருப்பம்" என தியாகி திலீபன் அன்று தெரிவித்திருந்தான்.

எந்தவொரு மனிதனும் திடீரென தியாகியாகி விட முடியாது.

ஆனால் திலீபனின் வாழ்வு கௌரவத்தன்மை, தனக்கென வாழாத்தன்மை கொண்டது.

தான் பிறந்தமண்ணுக்காக போராடக்கூடிய துணிவு என்பனதன்னைத்தானே அழித்து உயிர் வாழ்வதற்கல்ல மண்ணுக்கே சொந்தம் என்பதை காட்டிவிட்டார்.

திலீபனின் ஊன் உடம்பு அழிந்ததேயொழிய அவன் இன்றும் எம்மில் ஒருவனாக வாழ்ந்து கொண்டேயிருக்கின்றான் "தியாகம்" எங்கிருக்கிறதோ அங்கெல்லாம் திலீபனின் உருவத்தை நாம் காணலாம்.

### தியாகச் செம்மல்

திலீபனின் தியாகம் அகிம்சா மூர்த்தி, அண்ணல் காந்திமகான் காந்தியத்தை தலை குனிய வைத்தது.

திலீபனின் தியாகம் இந்தியாவின் ஜாலவார்த்தைகளை அம்பலத்துக்கு கொண்டுவந்ததோடு அல்லாமல் இந்திய - இலங்கைஒப்பந்தம் ஓர் வெற்றுப் பொதி என்பதை உலக நாடுகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

போராட்ட வடிவங்கள் மாறினாலும்தான் கொண்ட இலட்சியம் மாறாது என்பதை அகில உலகமும் வியக்கும் வண்ணம் எடுத்துக்காட்டிய தியாகி திலீபனின் நாமம் தமிழ்கூறும் நல்லுலகம் உள்ளவரை ஒவ்வொரு தமிழ் மகனதும்உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் என்பது திண்ணம்.

தமிழன்

யாழ். குடாநாட்டில்

# யுத்த நிறுத்தம் ஏற்படுத்துவதற்கு கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் அறை கூவல்

(யாழ்ப்பாணம்)

குறைந்த பட்சம் எதிர்வரும் பொதுத்தேர்தல்வரையாவது யுத்தம்நிறுத்தப்பட்டு அமைதி நிலை பேணப்பட வேண்டும் இவ்விடயத்தில் சகல தமிழ்க் கட்சிகளும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஈ.பி.ஆர். எல்.எவ். பிரமுகர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தற்போதைய யுத்தத்தின் கொடுமையை சாவகச்சேரி நகரம் துல்லியமாக எடுத்து விளக்குகிறது.

இவ்வாறானயுத்தசூழ்நிலையில்தேர்தலில் வாக்களிப்பது என்பதுமிககடினமானஒன்றே

தற்போது யாழ். குடாவில் நடத்தப்படும் யுத்தம் அதற்காக பயன்படுத்தப்பட்டு வரும் விமானக்குண்டு வீச்சுக்கள் மற்றும் பல் குழல் துப்பாக்கிப் பாவனை போன்றவை இராணுவ மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கு அவசியமானது என்றகருத்து இராணுவ தரப்பில் நிலவுவதாகவும் தெரிவித்தார்.

தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி தேர்தல் ஆணையாளரிடம் தாம்கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில்1981ம் ஆண்டு சுமார் 9 இலட்சத்தி 50 ஆயிரம் மக்கள் வாழ்ந்தனர். ஆனால் 20 வருடங்களின் பின்னர் தற்போது 4 இலட்சத்து 75 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

யுத்தம் மேலும் தொடருமானால் யாழ். குடாநாட்டில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் மக்களையே எதிர்பார்க்க முடியும்.

எனவே அழிந்து கொண்டிருக்கும் எம் இனத்தை காப்பாற்ற இச் சந்தர்ப்பத்தில் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து யுத்த நிறுத்தத்திற்கு வழிகோல வேண்டும் என்றார். (க-12)

புதிய
## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வத்திராயன கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் புதிய நிர்வாகிகளை தெரிவு செய்துள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழில் பரிசோதகர் சி.கணபதிப்பிள்ளை தலைமையில் மேற்படி கூட்டம்நடைபெற்றது.

இத் தெரிவுக் கூட்டத்தில் தலைவராக வி. எஸ். ஸ்ரீகந்தசாமி, செயலாளராக கு.தங்கேஸ்வரன், பெருளாளராக வே. ரவீந்திரராசா, ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த)

## பொது மக்கள் பெருஞ் சிரமம்


(கல்வயல் )

பேருந்து வண்டியின் மிதிபலகையின் இருமருங்கும் கைப்பிடி அற்ற நிலையில் சேவையில் ஈடுபடுகின்றமையால் பயணத்தில் ஈடுபடுகின்ற சிறுவர்களும், வயோதிபர்களும் பெருஞ் சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக் கட்டுவன் ஊடாக சுன்னாகம் செல்கின்ற, வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான கோண்டாவில் சாலை 764-ஆம் இலகக பேருந்து வண்டியே இவ்வாறு சேவையில் ஈடுபடுகின்றது.

இவ்வாறு போக்குவரத்துச் சபையினர் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றமை குறித்து பொது மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். (செ-111)

## 27ஆவது ஒலிம்பிக் போட்டி



## 10-வது நாளான நேற்றுவரை அமெ.58,சீனா48,ரஷ்யா47பதக்கங்கள்

சிட்னி 'ஹோம் போஸ்பே' மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒலிம்பிக் போட்டியின் 10 ஆவது நாளான நேற்றுவரை அமெரிக்கா 23 தங்கம், 14 வெள்ளி, 21 வெண்கலம் என 58 பதக்கங்களைப் பெற்று தொடர்ந்தும் முன்னணி வகிக்கின்றது.

சீனா 21 தங்கம், 14 வெள்ளி, 13 வெண்கலம் என 48 பதக்கங்களைப் பெற்று 2 ஆவது இடத்தினையும், ரஷ்யா 14 தங்கம், 14 வெள்ளி, 19 வெண்கலம் என 47 பதக்கங்களைப் பெற்று மூன்றாவது இடத்தினையும் வகிக்கின்றது.

இதே வேளை பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் எத்யோப்பியாவைச் சேர்ந்த 'ஏமி ஜெகத் செலக்ஷி' முதலாம் இடத்தினைப்பெற்று தங்கப்பதக்கத்தினைத் தட்டிச் சென்றார். (வ-4)

## மலையக வேட்பாளர்களுக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

மலையகத்தில் தேர்தல்சூடு பிடித்து வரும் இவ் வேளையில் தமிழ் வேட்பாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள தாகத் தெரியவருகிறது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தின் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமே இக் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து ஐ.தே.க. வேட்பாளர்களான எஸ். சதாசிவம், வி. புத்திரசிகாமணி, பி. சந்திரசேகரம் ஆகியோருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ந-4)

### பலபலப்பிட்டி...

தொப்பிகள்வழங்கப்பட்டது. இவ் விளைஞர்களை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தி அவர்களைக் கொண்டு சுவரொட்டிகளை ஒட்டுவித்த பின் மாலை 7 மணிக்கு வீடு திரும்ப அனுமதித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் கொழும்பு மாவட்டத்தில் போட்டி இடுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

### பண்டார நாயக்காவின் 41வது சிரார்த்ததினம்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் அமரர் எஸ். டபிள்யு. ஆர்டி. பண்டார நாயக்காவின் சிரார்த்த தினம்இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

பிரதான வைபவம் இன்று நித்தம்புவ ஹொரகொல்லை சமாதியில் நடைபெறவுள்ளது (வ)

### தியாகி...

உண்ணாவிரதம் ஒன்றினையும் மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (ந-4)

# யாழ்.மாவட்ட தேர்தலுக்கு தேவையானபஸ்கள்இங்குஇல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் தேர்தல் வேலைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு போதிய பஸ் வண்டிகள் வடபிராந்திய போக்குவரத்து சபையினரிடம் இல்லை என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பஸ் பற்றாக்குறை பற்றி, யாழ். அரச அதிபர், யாழ். படை அதிகாரிகள், வடபிராந்திய பொதுமுகாமையாளர் தேர்தல் ஆணையாளர் ஆகியோர் உயர் மட்டரீதியாக எடுத்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். தேர்தல் நடவடிக்கைகளுக்கு சுமார் 89 பஸ் வண்டிகள் தேவைப்படுவதாகவும், போக்குவரத்து சேவைக்கு சுமார் 50 பஸ் வண்டிகள் தேவைப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் தற்போது 89 பஸ்வண்டிகளே சேவையில் உள்ளது.

இதேவேளை சுமார் 35பஸ் வண்டிகள் என்ஜின் மற்றும் உதிரிப்பாகங்கள் இன்றி இருப்பதாகவும், இவற்றுக்குரிய உதிரிப்பாகங்களை பெறுவதற்கு முயற்சிகள் எடுத்தபோதும் அது கைகூடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### இடர்கால...

ஆசிரியர்களுக்கு வழங்கப்படாத சம்பள நிலுவையை வழங்குவதற்கு 35 மில்லியன் ரூபாவும், 1999ஆம் ஆண்டு இடர்காலக் கொடுப்பனவை வழங்க 120 மில்லியன் ரூபாவையும் வழங்குமாறு அவர் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (வ)

### மீட்கப்பட்ட...

பெறுமதி சுமார் 39இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

திருமணத்திற்கு பயன்படுத்தப்படும் இமிற்றேசன் நகைகள், மோதிரங்கள்: சங்கிலிகள், காப்புகள் மற்றும் மூன்று பெரிய தங்கபாளங்கள் இவற்றுள் அடங்குவதாக மேலும் அறியப்படுகிறது.

நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல, ஈ.பி.டி.பி. சார்பில் கே.வி. குகேந்திரன் ஸ்ரீ ல.சு. கட்சி சார்பில் சின்னையா சிவஞானம் தமிழர். விடுதலைக் கூட்டணி சார்பில் வீ. ஆனந்தசங்கரி, இராணுவ உயர்அதிகாரி ஜயசூரிய மற்றும் அரச உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மேற்படி நகைகள் பலவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு பற்றுச் சீட்டுகளுடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நகைகளை பொது மக்கள் அடையாளம் காட்டி பெறுவது குறித்து விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### சிற்றி...

பெறும் பயணிகள் கப்பல் சேவைக்கு உரிய பயணச் சீட்டுக்கள் நாளை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

65 வயதிற்கு மேற்பட்டவர்கள், நோயாளர்கள், கர்ப்பவதிகள் போன்றோர் தமது பயணச்சீட்டைப் பெறுவதற்கு நேரில் வரவேண்டிய அவசியமில்லை எனவும் உரிய ஆவணங்களுடன் தெரிந்தவர்களை அனுப்பினால் பயணச்சீட்டு வழங்கப்படுமெனவும் சிவில் நிர்வாகக் காரியாலயம் மேலும் தெரிவித்துள்ளது.

பயண அனுமதி மற்றும் பதிவுகளை ஞாயிறு தவிர்ந்த ஏனைய தினங்களில் பிற்பகல் ஒருமணிக்குப் பின் மேற்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

### படை...

பங்கு வகித்தன எனினும் புலிகளின் ஆட்லறி மோட்டார் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் ஆர். பி. ஜி. தாக்குதல் அதிதீவிரமாக இருந்ததாகவும் இதன் போது படையினர் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியதாகவும் தெரிவித்தது.

இச்சம்பவத்தின் போது புலிகள் படையினர் மீது சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எறிகணைகளை மழை போல் ஏவியதாகவும் இதற்கு படையினர் வெற்றிகரமாக பதிலடி கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்புத்துறைப் பகுதியில் புலிகளால் அதிநவீன தொழில் நுட்ப முறையில் அமைக்கப்பட்ட 70 அடி நீளமான சுரங்கமொன்றையும் படையினர் கண்டு பிடித்தனர்.

இச்சுரங்கத்தினூடாக வாகனங்கள் செலவக்கூடிய வசதிகள் இருந்ததுடன் அது சக்தி வாய்ந்த எறிகணைகள் மூலமும் தகர்க்க முடியாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ந-4)

## விமானத் தாக்குதல்

(சுண்டுக்குழி)

மணியம்தோட்டம், கிழக்கு அரியாலை, நாவற்குழிப்பகுதிகளில் நேற்று பரவலான விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

ஏழிற்குமமேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் சேத விபரங்கள்குறித்து தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. (க-110)

### ஜானக பெரேரா...

அமைச்சர் ரத்வத்த ஜானக பெரேரா கையேற்றபின் குடாநாட்டின் கேந்திரநிலைகளை இழக்க நேரிட்டபின் யாழ் நகரம் உட்பட முக்கிய இடங்கள் புலிகளின் வசம் செல்லக்கூடிய நிலையும் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில இருந்து பெருந்தொகையான படையினரை ஆயுதங்களுடன் பலாலிக்கு வாபஸ் பெறுவதற்கான நடவடிக்கையை ஜானக பெரேரா மேற்கொண்டிருந்தார். அவர் தொடர்ந்தும் பதவியில் இருந்திருந்தால் குடாநாட்டை முழுமையாக இழக்க வேண்டி வந்திருக்கும் என்றும் கூறினார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் அனுருத்த பேச்சு வார்த்தை நடத்துவதற்கு முன் நிபந்தனையாக யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்றும் வலியுறுத்திக் கூறினார். (வ)


## சீமெந்துக்கூரை ஓடுகள் (LMCRS)

லோகேஸ் கூரைஓட்டுத் தொழிற்சாலை

இணுவில்.

ஜீ.ரி.சற், அரச சார்பற்ற நிறுவனங்களால் புனரமைப்பு செய்யப்படும் வீட்டுத்திட்டங்கள், பாடசாலைக்கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சீமெந்துக் கூரை ஓடுகள், முகட்டோடுகள், விற்பனைக்குண்டு.

இயந்திரம் மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையும் விற்பனை நிலையமும்

Loges Sheet Industries,
Inuvil.

(1768)



## ஹெந்தல கப்பலில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுவோர் கவனத்திற்கு

தற்போது பருத்தித்துறையில்சிமெந்து இறக்கிக்கொண்டிருக்கும் ஹெந்தல (HENDALA) கப்பலில் வெங்காயம், புகையிலை போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஏற்ற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

T. P. 2407. Fax 2140

(இ-822)




வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்

ஐப்பசி10 உங்கள் வாக்கு எங்களுக்கே!

யாருக்கும் அச்சப்படாதஎமதுதனித்துவமான அரசியல் வழிமுறைகளும், தன்னம்பிக்கையும் எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தரும்!

(ஈ. பி. டி. பி)



(இ/736)

இன்றுவரை ஈ. பி. டி. பியின்ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் 551 தொண்டர் ஆசிரியர்கள் பயிலுநர் ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்கள்


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாத்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.